# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.56/2023

## CNR.No.TNCB19000

Date: 05.11.2024 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தங்கவேல் | **வயது** | 52 |
| **த/பெ** | **மாரண்ண கவுண்டர்** | **வட்டம்** | -- |
| **விலாசம்** | பட்டக்காரம்பாளையம் ,<br>மேட்டுப்பாளையம் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 05th November 2024.

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2ம் பிரதிவாதி ஈஸ்வரன் என்பவர் மேஸ்திரி என்றால் சரிதான். அவர் சென்டரிங் வேலை செய்வதற்கு ஆட்களை தேர்வு செய்து அனுப்புபவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் கட்டிடத்தில் வேலை செய்வதற்காக அனுப்பி வைத்தார் என்றால் சரிதான். அந்த கட்டிடத்தின் பொறியாளர் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். கட்டிட உரிமையாளருடன் ஒப்பந்தம் செய்து 1ம் பிரதிவாதி வேலை செய்து வந்தார் என்று பிராதில் சொல்லி உள்ளேன் அந்த கட்டிடத்தின் உரிமையாளரை தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சென்டரிங்வேலை 3 முதல் 5 நாட்கள் இருக்கும் என்றால் ஒரு வாரம் இருக்கும்.

கட்டிடத்தில் சாரம் கட்டி அதன்மேல் ஏறி வேலை செய்வோம் என்றால் சரிதான். அந்த சாரம் மரங்களால் கட்டப்பட்டிருக்கும். அதேபோல் மேலே இருந்து கீழே இறங்கும்போது சாரத்தின் வழியாக தான் இறங்குவோம் என்றால் சரிதான். விபத்து எப்படி நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் 6 நபர்கள் வேலை செய்தார்கள். என்னைத் தவிர வேறு யாருக்காவது காயங்கள் ஏற்பட்டதா என்றால் ஒரு சின்னபையனுக்கு மட்டும் லேசாக காயம் ஏற்பட்டது. விபத்துக்கு காரணம் நான் மேற்கூரையிலிருந்து சாரத்தின் வழியாக ஒவ்வொருவராக இறங்குவதற்கு பதிலாக ஒரேநேரத்தில் 3 நபர்கள் சாரத்தின் மேல் குதித்ததால்தான் சாரம் குடைசாய்ந்தது போல் விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சுவருடன் பிடுங்கி கொண்டு வந்ததால்தான் விபத்து ஏற்பட்டது.

நாங்கள் ஒவ்வொருத்தராக இறங்கியிருந்தால் இந்த சம்பவம் நடந்திருக்காது என்றும் நாங்கள் மூவரும் ஒன்றாக சேர்ந்து இறங்கியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதைக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மீது குற்றம் சுமத்துவது தவறானது என்றால் சரியல்ல. அன்றையதினம் 2ம் பிரதிவாதி ஈஸ்வரன் சம்பவ இடத்தில் இருந்தார் என்றால் அங்குதான் இருந்தார்.

அன்று கட்டிட பொறியாளர் சரவணன் சம்பவத்தின்போது இல்லை. 2ம் பிரதிவாதி ஈஸ்வரன் கட்டிடம் ஈரமாக இருப்பதால் இன்று வேலை செய்ய வேண்டாம் என்று சொன்னார் என்றால் சரியல்ல. நான் 2ம் பிரதிவாதியின் அறிவுரை மற்றும் ஆலோசனையை கேட்காமல் நாங்கள் மூவரும் குடிபோதையில் இருந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை கார்த்தி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு ஞாபகம் வரும்போது நான் எங்கு இருந்தேன் என்றால் திப்பையன் மருத்துவமனையில் மாவுக்கட்டுபோட்டு இருந்தேன்.

1ம் பிரதிவாதியால் எனக்கு முதலில் கார்த்தி மருத்துவமனையிலும் பிறகு திப்பையன் மருத்துவமனையிலும் முதலுதவி செய்தார்கள் என்றால் சரிதான். இரண்டு மருத்துவ மனைகளிலும் ஏற்பட்ட செலவினை 1ம் பிரதிவாதியே செய்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இரண்டு மருத்துவமனைகளிலும் எனக்கு செலவு செய்த விபரம் தெரியும் என்றும் அதனால்தான் பிராதிலும் முதல் விசாரணையிலும் மறுக்காமல் தற்போது 1ம் பிரதிவாதி செலவு செய்யவில்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக வேண்டி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

விபத்து ஏற்பட்டவுடன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் எனது மனைவி புகார் கொடுத்தார். நான் சொல்வதுபோல் என் மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகார் பொய் புகார் என்பதால்தான் மேட்டுப்பாளையம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காலதாமதமான புகார் என்பதால் அது பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல. திப்பையன் டாக்டர் அவரிடம் சிகிச்சை பெற்றபிறகு வேறு எங்கு சிகிச்சை செய்தேன் என்றால் கோயமுத்தூர் பூ மார்க்கட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன்.

கோயமுத்தூர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு செல்வதற்கு முன்பு திப்பையன் டாக்டரிடம் ஆலோசனை பெற்றபோது அவர் கால் குணமாகிவிட்டது மேல் சிகிச்சை வேண்டாம் என்று சொல்லியும் நான் கோயமுத்தூர் சுருதி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன் என்றால் வலி இருந்ததால்தான் சிகிச்சைக்கு சென்றேன். மேல் சிகிச்சை எடுத்தால் அதிகம் நஷ்ட ஈடு கிடைக்கும் என்று தவறாக ஆலோசனை கூறியதன்பேரில் மேல் சிகிச்சை

எடுத்துக்கொண்டேன்என்றும் எனக்கு சிகிச்சை தேவையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சிகிச்சைகளுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

எனக்கு விபத்தினால் முழு தகுதி இழப்பு ஏற்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றும் அதற்காக தகுதிவாய்ந்த அரசு மருத்துவமனையிலிருந்து சான்று வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது பிராதில் பத்தி எண்-10 ல் வேலையின் விளைவாக மற்றும் வேலையின்போது ஏற்பட்ட விபத்தில், அதே பத்தியில் நிரந்தர உடல் தகுதி இழப்பு, போன்ற வார்த்தைகளை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கும் நிலையில் அதனால் இந்த வழக்கு தொழிலாளர் நீதிமன்றத்தில்தான் இழப்பீடுகேட்டு வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

விபத்து ஏற்பட்டால் தொழிலாளர் நீதிமன்றத்தில் 6 மாதங்களுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். நான் 6 மாதத்திற்குள் தொழிலாளர் நீதிமன்றத்திலும் இந்தநீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் அதை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தொழிலாளர்களுக்காக நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்திருந்த விபரம் பற்றி எதிர்வழக்குரையில் சொல்லியிருந்தும் இதுநாள்வரை அந்த நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தேவையான தரப்பினர்களை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

விபத்து ஏற்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் காலவரையறை சட்டத்தின்படி இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்கள் அனைத்தும் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதின் கடைசி பத்தியில் சரிபார்த்தல் பகுதியில் தொழிலாளர் நீதிமன்றத்திலோ அல்லது வேறு நீதிமன்றத்திலோ வழக்கு தாக்கல் செய்யவில்லை என்ற விபரம் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். அதனால் சட்டத்தின்படி எனது பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நல்ல உடல் தகுதியில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் உடல்தகுதி இழப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் பிரதிவாதி இறப்பிற்கு காரணம் இந்த வழக்கு தாக்கல் செய்ததால்தான் என்றால் சரியல்ல.

நான் என்னுடைய கவனக்குறைவாகவும் அஜாக்கிரதையாகவும் விபத்து ஏற்படுத்தி கொண்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மீது இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிலைக்கத்தக்கதல்லஎன்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

| |
|---|
| திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார். |

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.